بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝

# ஜுமுஆ பேருரை


அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**


**April 18 2014**



# எல்லாம் வல்ல ஒரே இறைவன்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். அவற்றில் அன்னார் அல்லாஹ்வைப் பற்றியும், அவனது உண்மை நிலை குறித்தும், அவனது தகுதிகள் என்னவென்றும், அவன் எவ்வாறு எல்லா சக்திகளுக்கும் எஜமானனாகவும், ஒருவனாகவும், தனித்தன்மை வாய்ந்தவனாகவும் இருக்கிறான் என்றும், அவனே எல்லாப் படைப்பினங்களின் படைப்பாளன் என்றும், ஒவ்வொரு பொருளும் அழியக்கூடியவை. ஆனால் அவன் மட்டுமே அழிவில்லாதவன் என்றும் எடுத்துரைக்கிறார்கள். மேலும் இந்த பிரபஞ்சம் இறைவன் வரை இப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே சென்றடைய முடியும் என்றும் கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே இறைவன் வரை சென்று சேர முடியும். அவனது அழகிலும் கருணையிலும் அவனைப் போல் வேறொருவன் இல்லை.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவனது வல்லமைகளைப் பார்ப்பதற்கு அவன் முன் களங்கமற்ற முறையில் குனிவது அவசியமாகும். அவனுக்கு இபாதத் செய்வது அவசியமாகும். பிறகு இந்த நிலையை அடையும் போது இறைவன் ஓடி வந்து அவனை அடைகிறான்; தனது அருளைப் பொழிகிறான்.

எனவே அன்னார் மிகவும் துயரத்துடன் கூறினார்கள்: அத்தகைய இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அதன் மூலம் உங்கள் உலகையும், மறுமையையும் அடைவீர்கள்.

***மேலும் ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:***

அல்லாஹ்வின் உண்மை நிலை என்ன? அந்த இறைவன் பிரபஞ்சங்களின் உரிமையாளன் ஆவான். அத்தகைய இறைவனை இஸ்லாம் எடுத்து வைத்துள்ளது.

***அவனது உண்மை நிலை என்ன? என்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவன் வானங்கள் பூமியின் ஒளி ஆவான். அதாவது தென்படுகின்ற ஒவ்வொரு ஒளியும் அது ஆத்மாவில் இருந்தாலும், உடல்களில் இருந்தாலும், இயல்பானதாகவோ, பண்பானதாகவோ இருந்தாலும் அது வெளிப்படையானதாக இருந்தாலும், மறைவானதாக இருந்தாலும், மனதளவில் இருந்தாலும், வெளியில் இருந்தாலும், அது அவனுடைய அருட்கொடை ஆகும். இந்த அனைத்து வகை ஒளிகளும் இறைவனிடமிருந்தே வருகின்றன. இது அனைத்துலங்களையும் படைத்துக் காத்தோம்பும் இறைவனி அருள் எல்லாவற்றையும் சூழ்ந்திருக்கிறது என்பதைக் காட்டும் அத்தாட்சியாகும்.

அவனது அருள் கிடைக்காதது எதுவுமில்லை. அவனிடம் சுய மேன்மைகள் உள்ளன. அல்லாஹ்விடம் சிறப்பான தொடர்பு வைத்துள்ள சில மனிதர்களிடம் உள்ள மேன்மைகள் அவை வெளிப்படையான மேன்மையாயினும், மறைந்துள்ள மேன்மையாயினும், மனதளவிலான மேன்மையோ அல்லது வெளியே உள்ள மேன்மைகளோ, மனிதனுக்கு வெளியில் தென்படுகிற மேன்மைகளோ அவை அனைத்தும் அல்லாஹ்வின் ஒளியின் காரணமாகவே ஆகும். அவை அனைத்தும் அவனது அருளினால் விளைந்த கொடையே ஆகும். இவை அனைத்தும் படைத்துப் பரிபாலிக்கின்ற அந்த இறைவனின் அருள் ஒவ்வொரு பொருளையும் சூழ்ந்துள்ளது என்று சுட்டிக் காட்டுகிறது. எதுவும் அவனது அருளை விட்டும் வெறுமையாக இல்லை. உலகில் என்னென்ன பொருள்களெல்லாம் உள்ளனவோ அவற்றின் மேன்மைகள் தென்படுகின்றனவோ, எங்கெல்லாம் அழகு தென்படுகிறதோ, எதனை மனிதன் பார்க்கின்றானோ, பயனடைகின்றானோ இந்த அனைத்து வகை பொருள்களும் அல்லாஹ்வுடைய பொதுவான அருள்களின் காரணமாகவே உள்ளவையாகும். எதுவும் அவனது அருளிலிருந்து வெறுமையாக இல்லை.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அவனே எல்லா அருள்களின் தொடக்கமானவன் ஆவான். எல்லா ஒளிகளின் அடிப்படையும், எல்லா கருணைகளின் தலையூற்றும் ஆவான். அவனிடமிருந்தே எல்லா அருள்களும் பீறிடுகிறது. அவனே எல்லா நூர்களின் காரணகர்த்தாவும், வழியும் ஆவான். அவனிடமிருந்தே ரஹ்மத்துகளின் தலையூற்று பொங்குகிறது. அவனது இருப்பு தான் எல்லா உலகங்களின் நிலைப்புக்கும் ஆதாரமாகும். அதாவது எல்லா உலகமும் நிலைத்து நிற்பதற்காக என்னென்ன பரிணாம மாற்றங்கள் நடைபெறுகின்றனவோ அவை அனைத்தும் அவனிடமே சென்று சேருகின்றன. அவனே ஒவ்வொரு பொருளையும் இருளின் வீட்டிலிருந்து அல்லது இல்லாமையிலிருந்து வெளியில் கொண்டு வந்தவன் ஆவான். இருளில் இருந்தவற்றை வெளியில் கொண்டு வந்து இருப்பு என்னும் ஆடையை வழங்கினான். தன்னாலேயே சுயமே உருவானதாகவும் புராதனத்தன்மை கொண்டதுமான ஒரு பொருளும் இல்லை. அவனைத் தவிர அத்தகைய எந்தவொரு பொருளும் இல்லை. தாம் நிரந்தரமாக இருப்பவன் என்று சொல்ல உரிமை படைத்த எந்தவொரு பொருளும் இல்லை அல்லது அவனிடமிருந்து பயன் பெறாமல் இருக்கக்கூடியது எதுவுமில்லை. இன்னும் சொல்வதாயின், மண், விண், மனிதன், மிருகம், கல், மரம், உயிர், உடல் ஆகிய அனைத்தும் அவனது அருளினாலேயே தனது இருப்பைப் பெற்றன. நமது உலகமும், வானமும், மனிதனும், விலங்கும், கல்லும், மரமும், உயிரும், உடலும் ஆகிய அனைத்தும் அவனது அருளினாலேயே இருப்பைப் பெற்றன.

பிறகு அல்லாஹ் தனித்தவன்; இணையற்றவன் என்பது குறித்து தெளிவுபடுத்தியவாறு ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

பகுத்தறிவின் அடிப்படையில் இணை வைத்தல் நான்கு வகைப்படும். சில வேளை இணை வைத்தல் எண்ணிக்கையின் அடிப்படையிலும், சில வேளை தகுதியின் அடிப்படையிலும், சில வேளை வம்சாவழி மூலமும், சில வேளை செயலில் தாக்கம் ஏற்படுவதன் மூலமும் இணை வைத்தல் உருவாகிறது. எனவே இந்த நான்கு வகை இணை வைத்தலிலிருந்து இறைவன் தூய்மையாக இருப்பதாக சூரா இக்லாஸில் விளக்கியுள்ளான். இறைவன் தெளிவாகக் கூறி விட்டான். அவன் எண்ணிக்கையில் ஒன்றுதான். இரண்டு அல்லது மூன்று அல்ல. அவன் ஸமது ஆவான். அதாவது, அவன் தனது வியத்தகு தகுதியில் பிறரது தேவை உடையவனாக இருப்பதிலிருந்து தனிப்பட்டும், தன்னந் தனியானதாகவும் உள்ளான். பிற அனைத்தும் தற்காலிகமானவையும் அழியக்கூடியவையும் ஆகும்.

சில வார்த்தைகள் கடினமானவையாக இருக்கும். எனவே நான் சிறிது விளக்கம் கூறுவேன்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

எல்லாரும் அவனிடம் தேவை உடையோர் ஆவர். அவன் لَمْ يَلِدْ அவனுக்கு மகன் இல்லை. அவனது மகனாக ஆனதால் ஒருவர் அவனுக்கு இணையாக ஆக முடியாது. அவன் وَلَمْ يُوْلَدْ அவனுக்கு எந்த தந்தையும் இல்லை. அவனுக்கு தந்தையாகியதால் அவனுக்கு ஒருவர் இணையாகவும் முடியாது. وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ஆவான். அதாவது அவனது பணிகளில் ஒருவரும் அவனுக்கு சமமானவராக இல்லை. அதாவது செயலளவில் அவனுக்கு சரிசமமாக இருக்கக்கூடியவர் எவரும் இல்லை. எனவே இந்த நான்கு வகையான இணைகளிலிருந்தும் தூய்மையானவன்; அப்பாற்பட்டவன் என்றும், அவன் وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ தனித்தவன்; இணையற்றவன் என்றும் தெளிவுபடுத்தி விட்டான்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இணை வைத்தல் அல்லது ஒருவர் இணையாக இருப்பதற்கு அறிவிப்பூர்வமாக பார்த்தால் இந்த நான்கு அம்சங்கள் மூலமாகத்தான் ஒருவர் இணையாக இருக்க முடியும். அதாவது எண்ணிக்கை அடிப்படையில் ஷிர்க் வைக்கப்படலாம். அதாவது முதல் வகையில் எண்ணிக்கை அடிப்படையில் **1, 2, 3, 4, 5** என கடவுள்களை

ஏற்படுத்துவதன் மூலம் இணை வைக்க முடியும். இரண்டாவது அவனது தகுதி அந்தஸ்து அடிப்படையில், மூன்றாவது குடும்பம், வம்சாவழி மூலமாக, நான்காவது ஒரு வேலை செய்யும் சக்தியின் அடிப்படையில், தனது தாக்கத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் ஷிர்க் வைக்க சாத்தியமுண்டு. கூறுகிறார்கள்: இந்த நான்கு வகை ஷிர்க்கிலிருந்தும் அல்லாஹ் தூய்மையானவன்.

இந்த அத்தியாயத்தில் தெளிவாகக் கூறி விட்டான். அவன் அஹது. அவன் எண்ணிக்கையின்படி கூறுவதாயின் ஒருவன் தான். இரண்டு, மூன்று, நான்கு அல்ல. இந்த வகையில் அவனுக்கு சமமானவன் இருக்க முடியாது. அடுத்து அவன் ஸமது. அவனது தேவை மட்டுமே எப்போதும் படைப்பினங்களுக்கு உள்ளது. ஒரு பொருள் தேவை என்றால் அவனிடம் மட்டுமே செல்லப்படுகிறது. செல்லவும் வேண்டும். அல்லது அவனிடம் செல்வதற்கு அவன் மட்டுமே அதற்கு உரிமையாளனும் ஆவான். அல்லது தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவனுக்கு சமமானவன் எவரும் இல்லை. காரணம் என்ன? தேவைகளை நிறைவேற்றுவதற்கு சமமான ஒன்று ஏன் இல்லை?

***அதற்கான காரணத்தை அன்னார் இவ்வாறு விளக்குகிறார்கள்:***

அவனைத் தவிர ஒவ்வொன்றும் படைக்கப்படக்கூடியவை. இறைவன் நிரந்தரமான ஒருவன் ஆவான். ஒவ்வொரு பொருளுக்கும் அழிவு உண்டு. ஒரு நேரம் முடிவு ஏற்படும். அழியக்கூடியவை அதாவது படைப்பினமாகிய ஒவ்வொரு இருப்புடனும் ஒரு பிறப்பும் ஒரு இறப்பும் உள்ளது. ஆனால் இறைவன் நிரந்தரமானவனாக இருக்கிறான்; நிரந்தரமாக இருப்பான். எனவே பிறக்கவும் இறக்கவும் செய்கின்ற காரணத்தால் பிற படைப்புகள் தற்காலிகமானவை. சிறிது காலத்திற்காக உள்ளவை. ஒன்று தற்காலிகமானதாகவும் சிறிறு காலத்திற்காகவும் இருக்கும் எனில் அவற்றால் தனது தேவைக்கான அனைத்து பொருளையும் பெறவும் இயலாது. மேலும் பிறருக்கும் வழங்குவதற்கான ஏற்பாட்டையும் செய்ய இயலாது. ஆகவே எல்லா பொருளையும் வழங்க முடியாத நிலையில் அவனுக்கே ஒரு இறைவனின் தேவை ஏற்படுகிறது. எப்போதும் இருந்து வருபவனும் இருக்கப் போகிறவனுமாகிய இறைவனாக அவன் இருக்க வேண்டும். நான் படைப்பினங்களின் வாழ்வை நிலைத்திருக்கச் செய்வதற்கான ஏற்பாடு செய்துள்ளேன் என்று அவன் அறிவிக்கிறான். அவனையே நாம் சார்ந்து நிற்க முடியும். நிற்கவும் வேண்டும். ஆகவே இதுவே காரணமாகும். இதுவே ஸமது என்பதன் விளக்கமாகும்.

பிறகு வம்சாவழி பற்றி கூறினார்கள். இறைவன் கூறுகிறான்: லம் யலிது எந்த மகனும் இல்லை. வலம் யூலத் அவனுக்கு எந்த தந்தையும் இல்லை. அவன் இந்த வம்சாவழி தொடர்களை விட்டும் உயர்ந்தவன். எனவே அவனுக்கு ஒன்று இணையாக முடியாது.

நான்காவது விஷயம் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: அவனது பணிகளில் அவனுக்கு இணையானவன் ஒருவனும் இல்லை. அவனுக்கு சமமாக ஒருவன் இல்லாத போது இறைவனைப் போன்று ஒருவன் பணி செய்யவும் முடியாது. பணியின் விளைவுகளை உருவாக்குவதும் எவரது ஆற்றலுக்கும் உட்பட்டதும் கிடையாது. அல்லது ஏற்படுத்த முடியாது. சாதாரண உலகியலாளர் கூட தமது வேலையின் விளைவைக் காணுகின்றனர். பெருமையுடன், நான் அதனை செய்து விட்டேன்; இதனை செய்து விட்டேன் என்று கூறுகிறார். அவரது அந்த செயல் விளைவுகளை ஏற்படுத்துவதும் கூட அவரது ஆற்றலுக்கு உட்பட்ட விஷயமன்று. இயற்கைச் சட்டத்திற்கேற்ப மனிதனுக்கு அவனது உழைப்பின் பலன் கிடைக்கிறது. அவன் ரப்பும் ஆவான். ரஹ்மானும் ஆவான். அவனது படைத்துக் காத்தோம்பும் பண்பு மற்றும் கேட்காமலேயே கொடுக்கும் பண்பின் அருள்கள் மனிதனுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த இறைவனது பேருபகாரத்திற்கு அருகில் சென்று அவனுக்கு முன் குனிவதற்கு பதில் பெரும்பாலார் விலகிச் செல்கின்றனர். அத்தகைய மனிதர் பேறிழந்தவன் ஆவான். பிறகு லெக்சர் லாஹூரில் இறைவனது ஏகத்துவம் இறைவன் எல்லா பொருள்களின் உடைமையாளன் என்பது குறித்து இதே அத்தியாயத்தை வைத்து மேலும் விளக்குகிறார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

திருக்குர்ஆனில் நமது இறைவன் தனது மேன்மைகளைக் குறித்து கூறுகின்றான்.

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

அதாவது உமது இறைவன் தனது சுயம் மற்றும் பண்புகளில் தனித்தவன் ஆவான். அவனது சுய தன்மையில் அவனுக்கு சமமானது ஒன்றுமில்லை அல்லது வேறு ஏதாவது ஒன்றின் பண்பு அவனது பண்புக்கு சரி சமமாக இல்லை. மனிதனின் அறிவுக்கு ஒரு கற்றுத் தருபவர் தேவைப்படுகிறது கல்வியைப் பெறுவதற்கு கற்பிக்கின்ற ஒருவர் தேவை. பிறகு அதுவும் எல்லைக்குட்பட்டதும் கூட. எந்த அறிவைப் பெற்றாலும் அது எல்லைக்குட்பட்டதாகவே இருக்கும். இறைவனது அறிவுக்கோ ஒரு கற்பிப்பவரின் தேவை இல்லை. அதே வேளையில் அது அளவில்லாததும் ஆகும்.

மனிதனில் செவிப்புலனுக்கு காற்று தேவை. காற்றின்றி கேட்க முடியாது. எல்லைக்குட்பட்டதும் ஆகும். ஆனால் இறைவனின் கேள்விப்புலன் சுய ஆற்றலால் உள்ளது. எல்லைக்குட்பட்டதல்ல. மனிதனின் பார்வைக்கு சூரியனோ வேறு ஓர் ஒளியோ தேவைப்படுகிறது. பிறகு எல்லைக்குட்பட்டது. ஓரளவுக்கு தான் மனிதன் பார்க்க முடியும். ஆனால் இறைவனது பார்வை சுய ஒளியைக் கொண்டது. எல்லைக்கு அப்பாற்பட்டதும் ஆகும். அதுபோன்று மனிதனின் படைக்கும் ஆற்றல் மூலப்பொருட்களின் தேவையைக் கொண்டது. மேலும் காலம் தேவை. பிறகு எல்லைக்குட்பட்டது. ஆனால் இறைவனில் படைப்பாற்றல் மூலப்பொருளின் தேவையுடையதும் அன்று. காலத்தின் தேவை கொண்டதும் இல்லை. மேலும் எல்லைக்குட்படாததாகும். அவனது எல்லா பண்புகளும் இணையில்லாதது; ஒப்பில்லாதது. அவனுக்கு ஒரு இணையானது இல்லாதது போன்றே அவனது பண்புக்கும் இணையில்லை. ஒரு பண்பில் அவன் குறை உடையவனாக இருந்தால் பிறகு எல்லா பண்புகளுமே குறைபட்டதாகி விடும். அவனது சுயத்தைப் போன்றே அவனது பண்புகளும் ஈடிணையற்றதாக இல்லாதபட்சத்தில் அவனது ஏகத்துவம் நிலைபெற முடியாமல் போய் விடும். அதற்கு அடுத்து வருகிற வசனங்களின் பொருளாவது இறைவன் எவரது மகனும் அல்ல. அவனுக்கு ஒரு மகனும் இல்லை. அவன் தன்னிலையில் தன்னிறைவு பெற்றவனாவான். அவனுக்கு தந்தையின் தேவையும் இல்லை. மகனின் தேவையுமில்லை. இந்த ஏகத்துவத்தைத்தான் திருக்குர்ஆன் கற்றுத் தருகிறது. இதுவே ஈமானிய வட்டமாகும். இதற்குள் தான் ஈமானிய வட்டம் உள்ளது.

பிறகு இறைவனது ஒருமைப் பண்பிற்கு அடுத்து ஆதாரம் தந்தவாறு கூறுகிறார்கள்.

(21:23) لَوْ كَانَ فِيهِمَآ ءَالِهَةٌ إِلَّا ٱللَّهُ لَفَسَدَتَا

وَمَا كَانَ مَعَهُۥ مِنْ إِلَٰهٍ إِذًا لَّذَهَبَ كُلُّ إِلَٰهٍۭ بِمَا خَلَقَ وَلَعَلَا بَعْضُهُمْ عَلَىٰ بَعْضٍ
سُبْحَٰنَ ٱللَّهِ عَمَّا يَصِفُونَ (23.92)

வானங்கள் பூமியில் முழுமையான பண்புகளுடன் கூடிய இன்னோர் இறைவன் இருந்தால் இரண்டும் குழம்பியிருக்கும். ஏனெனில் இறைத்தன்மை கொண்ட ஒரு கூட்டம் இன்னொன்றிற்கு எதிராக கண்டிப்பாக பணி செய்யும். இந்த முரண்பாட்டினால் பிரபஞ்சத்தில் குழப்பமே மிஞ்சும். மேலும் தனித்தனி சிருஷ்டிகர்த்தா இருந்தால் அவர்களுள் ஒவ்வொருவரும் தத்தமது படைப்பினங்களின் நலனை விரும்புவர். தமது படைப்பினங்களை சுகமாக வைத்திருப்பதற்காக பிறரை அழிக்க விரும்புவர். ஆகவே இதனால் பிரபஞ்சத்தின் குழப்பத்திற்கு அதுவே காரணமாக அமைந்து விடும். எனவே ஒன்றுக்கு மேற்பட்ட இறைவன் இருக்கிறானா என்ற கேள்விக்கே இடமில்லை.

பிறகு இறைவனின் சில பண்புகள் குறித்து திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை குறிப்பிட்டவாறு சுருக்கமான ஒரு விளக்கத்தையும் அவர்களே கொடுத்துள்ளார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எந்த இறைவனின் பக்கம் திருக்குர்ஆன் அழைக்கிறதோ அவன் இந்த பண்புகளை எழுதியுள்ளான்.

(59:23) هُوَ ٱللَّهُ ٱلَّذِى لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ۖ عَٰلِمُ ٱلْغَيْبِ وَٱلشَّهَٰدَةِ ۖ هُوَ ٱلرَّحْمَٰنُ ٱلرَّحِيمُ

(1:4) مَٰلِكِ يَوْمِ ٱلدِّينِ

(59:24) ٱلْمَلِكُ ٱلْقُدُّوسُ ٱلسَّلَٰمُ ٱلْمُؤْمِنُ ٱلْمُهَيْمِنُ ٱلْعَزِيزُ ٱلْجَبَّارُ ٱلْمُتَكَبِّرُ

هُوَ ٱللَّهُ ٱلْخَٰلِقُ ٱلْبَارِئُ ٱلْمُصَوِّرُ لَهُ ٱلْأَسْمَآءُ ٱلْحُسْنَىٰ ۚ يُسَبِّحُ لَهُۥ مَا
فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ ۖ وَهُوَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ (59:25)

(2:21) عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ

(1:2-4) رَبِّ ٱلْعَٰلَمِينَ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ مَٰلِكِ يَوْمِ ٱلدِّينِ

(2:187) أُجِيبُ دَعْوَةَ ٱلدَّاعِ إِذَا دَعَانِ

قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ٱللَّهُ ٱلصَّمَدُ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ
وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌ (112:2-5)

அந்த இறைவன் தனித்தவனும் இணையற்றவனும் ஆவான். அவனைத் தவிர வேறு எவரும் வணங்குவதற்கும், கட்டுப்படுதலுக்கும் தகுதியானவர் இல்லை. இதனை அவன் கூறக்காரணம் அவனுக்கு இணையில்லையெனில், ஒருவேளை எதிரிகளின் ஆற்றல் அவனது ஆற்றலை மிகைத்து விடக்கூடும். இந்நிலையில் இறைவனின் இருப்பே ஆபத்தில் சிக்கி விடும். எனவேதான் அவனைத் தவிர வணங்குவதற்கு தகுதியானவன் ஒருவரும் இல்லை. இதன் பொருளாவது அவன் முழுமையான இறைவன் ஆவான். அவனது பண்புகள் மேன்மைகள் முழுமைகள் மிகவும் உயரியவை. இருப்பவற்றுள் முழுமையான பண்பின் காரணத்தால் ஒரு இறைவனை தேர்ந்தெடுக்க வேண்டுமெனில் உள்ளத்தில் மிக மிக உயரிய இறைவனை தேடினால் எல்லாரினும் உயர்ந்தவனும் அவனை விட உயர்வினை பெற்றவர் யாரும் இருக்க முடியாதவனே அந்த இறைவன். அவனுக்கு அணு அளவு இணை கற்பிப்பதும் அநீதியாகும். மனிதனின் சிந்தனை சென்றடையத்தக்க மிக மிக உயரிய இடம் வரை சென்று பார்த்தால் அது இறைவனேயாவான். அவனுக்கு சிறு அற்பப் பொருளையும் இணையாக்க முடியாது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஆலிமுல் கைப். அவனது சுயத்தை அப்பெருந்தகையே அறிவான். அவனது சுயத்தை எவரும் அளவிட முடியாது. சூரியன் சந்திரன் ஆகிய ஒவ்வொரு பொருளின் பௌதீக நிலையையும் நாம் பார்க்க முடியும். ஒவ்வொரு பொருளையும் நாம் பார்த்து விடலாம். ஆனால் இறைவனை பௌதீக தோற்றத்தில் பார்க்க முடியாது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அவன் ஆலிமுஷ் ஷஹாதா ஆவான். எந்த பொருளும் அவனது பார்வையை விட்டும் திரைக்குள் இருக்கவில்லை. இறைவனாக இருந்து கொண்டு அவன் பொருள்களைப் பற்றி தெரியாமல் இருப்பது பொருத்தமல்ல. அவன் இந்த உலகின் ஒவ்வொரு அணுவையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். ஆனால் மனிதன் அவ்வாறு கவனிக்க முடியாது. இந்த அமைப்பை எப்போது முறிப்பான் என்றும் கியாமத்தை கொண்டு வருவான் என்றும் அவனே அறிவான். அவ்வாறு எப்போது நடக்கும் என்று அவைனத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அந்த இறைவனே இந்த எல்லா ஆற்றல்களையும் தெரிந்தவன் ஆவான்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஹுவர் ரஹ்மான். இந்த உயிரினங்களின் இருப்பும் இயக்கமும் தோன்றும் முன்பே தனது விருப்பத்தால் எந்த நிர்பந்தமோ இன்றி, எவரது அமலின் பிரதிபலனாகவும் இன்றி அவர்களுக்காக இளைப்பாறுதலின் ஆயத்தங்களைச் செய்தான். உதாரணமாக, சூரியன், பூமி, மற்ற அனைத்து பொருள்களையும் நமது இருப்புக்கும், நமது செயல்களின் இருப்புக்கும் முன்னரே நமக்காக உருவாக்கினான். இந்த கொடைக்கு இறைவனின் வேதத்தில் 'ரஹ்மானிய்யத்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த வேலையினால் தான் இறைவன் 'ரஹ்மான்' என்று அழைக்கப்படுகின்றான். அதாவது எல்லா தேவைக்கான ஏற்பாட்டையும் முதலிலேயே ஆயத்தம் செய்து வைத்தது அவனது 'ரஹ்மானிய்யத்' ஆகும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அர்ரஹீம். அந்த இறைவன் நல்ல செயல்களுக்கு நற்கூலி வழங்குகிறான். எவரது உழைப்பையும் வீணாக்குவதில்லை. அந்த பணியால் அவன் ரஹீம் என்று அழைக்கப்படுகிறான். அவனது ரஹீமிய்யத் பண்பினால் இவ்வாறு பெயர் சூட்டப்பட்டான்.

***பிறகு இறைவன் கூறினான்:*** مٰلِكِ يَوْمِ الدِّيْنِ அந்த இறைவன் ஒவ்வொரு செயலுக்கும் பிரதிபலன் தருவதை தனது கையில் வைத்துள்ளான். வானம் பூமியின் ஆட்சியிலிருந்து முற்றிலும் விலகிக் கொண்டு அதை குறித்து அக்கறைப்படாமல், எல்லா காலத்திலும் பிரதிபலன் தருவதற்காக ஒரு பிரதிநிதியை அவன் நியமிக்கவில்லை. அவன் வேறு யாரையும் வைத்து வேலை வாங்க வேண்டிய தேவையில்லை. எல்லாம் அவனது கையில் உள்ளது. அவன் தனியாக உட்கார்ந்து கொண்டு எதுவும் செய்யாமல் அவனது பிரதிநிதியே எல்லாருக்கும் நற்கூலி, தண்டனை தருகின்றவனாக இருக்கின்றான் என்பதல்ல.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

اَلْمَلِكُ الْقُدُّوْسُ (59:24) இறைவன் அரசனாவான். அதில் அவனிடம் எந்த களங்கமும் பங்கமும் இல்லை. மனித அரசாட்சி குறையிலிருந்து விடுபட்டதல்ல என்பது வெளிப்படையாகும். மனித ஆட்சியில் ஏதாவது குறை, பலவீனங்கள் இருக்கும்.

உதாரணமாக, குடிமக்கள் அனைவரும் நாட்டை விட்டு மற்றொரு நாட்டிற்கு ஓடி விட்டால் அரசாட்சி நிலைநிற்க முடியாது. உதாரணமாக குடிமக்கள் அனைவரும் பஞ்சத்தில் அடிபட்டு விட்டால் பிறகு அரசின் செலவுக்கு பணம் எங்கிருந்து வரும்? வரிப்பணம் எங்கிருந்து வரும்? குடிமக்கள் அரசைப் பார்த்து எம்மை விட உம்மிடம் அதிகமாக என்ன இருக்கிறது? என்று கேட்டால் எந்த திறமையைக் காட்டி அரசர் தன்னை நிரூபிப்பார்? அதாவது அரசுக்கு எதிராக மக்கள் திரண்டு நின்று விட்டால் எவ்வாறு அரசு தம்மை நிரூபிக்கும். இக்காலத்தில் நாடுகளைப் பாருங்கள். இத்தகைய குழப்பங்களும் கிளர்ச்சியும் தான் நடக்கின்றன. அரசுக்கும் மக்களுக்கும் போர்கள் நடக்கின்றது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவனது அரசாட்சி அத்தகையதன்று. அவன் ஒரேயடியாக எல்லா நாடுகளையும் அழித்து விட்டு வேறு படைப்பினங்களை உருவாக்க முடியும். அத்தகைய வல்லமை உள்ளவனாகவும், படைப்பாளனாகவும் இல்லா விட்டால் பிறகு வெறும் அநீதியுடன் அன்றி அரசாட்சியை நடத்த முடியாது. ஏனெனில் உலகிற்கு ஒருமுறை மன்னிப்பையும் ஈடேற்றத்தையும் தந்து விட்டு இன்னொரு உலகத்தை அவன் எங்கிருந்து கொண்டு வருவான்? பிறகு ஈடேற்றம் பெற்ற மக்களை திரும்ப உலகிற்கு அனுப்புவதற்காக மீண்டும் பிடிப்பானா? தனது மன்னிப்பையும், ஈடேற்றத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வானா? இந்நிலையில் அவனது இறைமையே களங்கப்பட்டு விடும். இது சிலரது கொள்கையல்லவா? மன்னித்து விட்டு பிறகு திரும்ப அனுப்பினான் என்பது!

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

உலக அரசாட்சிகள் போன்று களங்கப்பட்டதாக இருப்பின் அவர்கள் உலகிற்காக சட்டம் இயற்றுகின்றது போன்று, கருத்திற்கு கருத்து முரண்படுவது போன்று, தமது சுயநலத்திற்காக அநீதி இழைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை அடையும் போது, அநீதியை தாய்ப்பாலாகக் கருதி, அவர்கள் தாய்ப்பாலை அருந்துவது போன்று அநீதியிழைக்கத் தொடங்குகின்றனர். இக்காலத்திலும் பார்க்கிறோம். சில நாடுகளில் அநீதியிழைக்கப்படுகிறது. அங்கும் நாட்டின் தலைவர்களின் தரப்பிலிருந்து இதுதான் நடைபெறுகிறது. அரசர்களின் சட்டம் ஒரு கப்பலைக் காப்பாற்றுவதற்காக ஒரு படகை அதில் பயணிப்பவருடன் மூழ்கடிப்பதை அனுமதிக்கிறது. ஆனால் இறைவனுக்கு இத்தகைய நெருக்கடி வருவதில்லை. வரவும் கூடாது. ஆக, இறைவன் முழுமையான ஆற்றல் உள்ளவனாகவும், இல்லாமையிலிருந்து சிருஷ்டிப்பவனாகவும் இல்லையென்றால், அவனும் பலவீனமான ராஜாக்களைப் போன்று வல்லமையின் இடத்தில் அநீதியைப் பயன்படுத்தியிருப்பான்! அல்லது நேர்மையாக நடந்த இறைமைக்கு விடை கொடுத்திருப்பான்! மாறாக, இறைவனது கப்பல் எல்லா வல்லமைகளுடன் உண்மையான நீதியுடன் செல்கிறது.

***பிறகு அல்லாஹ் கூறினான்:***

'அஸ்ஸலாம்' இறைவன் எல்லா குறைபாடுகள், தொல்லைகள், கடுமைகளிலிருந்து பாதுகாப்பானவன். அமைதியை வழங்குபவன். இதன் பொருளும் வெளிப்படையானது. அவன் தானே தொல்லைகளில் சிக்கியிருப்பவனாகவும், மக்களின் கைகளால் கொல்லத்தக்கனாகவும் தமது விருப்பத்தை செயல்படுத்த இயலாதவனாகவும் இருந்தால் அத்தகைய தீய முன்மாதிரியைக் கண்டு எந்த உள்ளம் தான் ஆறுதல் பெற முடியும்? அத்தகைய இறைவன் நிச்சயமாக நம்மை துன்பங்களில் ஏற்றி விடுவான். இந்த வகையில் அல்லாஹ் பொய்யாக வணங்கும் பொருள்களைப் பற்றி கூறுகின்றான்.

إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِنْ دُونِ اللّٰهِ لَنْ يَخْلُقُوا ذُبَابًا وَّلَوِ اجْتَمَعُوا لَهٗ ۖ وَإِنْ يَّسْلُبْهُمُ الذُّبَابُ شَيْئًا لَّا يَسْتَنْقِذُوهُ
مِنْهُ ۚ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوبُ ﴿٧٤﴾ مَا قَدَرُوا اللّٰهَ حَقَّ قَدْرِهٖ ۗ إِنَّ اللّٰهَ لَقَوِيٌّ عَزِيزٌ ﴿٧٥﴾ (22:74–75)

எவர்களை நீங்கள் இறைவனாக்கி இருக்கின்றீர்களோ அவை அனைத்தும் சேர்ந்து ஒரு ஈ –ஐக்கூட படைக்க நினைத்தால் கூட முடியாது. அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்தாலும் சரியே. ஏன்? அந்த ஈ, அவர்களிடமிருந்து ஒன்றை பிடுங்கிச் சென்றால் அதனை திரும்ப வாங்கவும் கூட அவர்களால் முடியாது. இவர்களின் வணக்கப் பொருள்கள் அறிவில் பலவீனமும், ஆற்றலின் பலவீனமும் ஆவர். இறைவன் இவ்வாறு தான் இருப்பானா? இறைவனோ ஆற்றல் வாய்ந்தோர் அனைவரையும் விட ஆற்றல் மிக்கவன் ஆவான். எல்லார் மீது மிகைத்தவன். அவனை எவரும் பிடிக்கவும் முடியாது. அவனை ஒருவரும் கொல்லவும் முடியாது. அத்தகையோர் எத்தகைய தவறில் வீழ்ந்துள்ளார்கள் எனில் அவர்கள் இறைவனின் கண்ணியத்தை உணரவில்லை. இறைவன் எப்படி இருக்க வேண்டும் என்றும் அறியவில்லை.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவன் அமைதியை வழங்குபவன். தமது முழுமைகள் மற்றும் ஏகத்துவத்திற்குச் சான்றை நிலைநாட்டுபவன்.

உண்மையான இறைவனை ஏற்றிருப்பவன் எந்த சபையிலும் வெட்கம் அடைய மாட்டான் என்பதும் இதிலுள்ள ஒரு சைக்கினையாகும். உண்மையான இறைவனை ஏற்றிருப்பவர் எந்த அவையிலும் வெட்கம் அடையமாட்டார். இறைவன் முன்பும் வெட்கம் அடையமாட்டார். ஏனெனில் அவர்களிடம் வலுவான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் செயற்கையான இறைவனை ஒப்புக் கொண்டவர் பெருந்துன்பத்தில் உள்ளார். அவர் சான்றை எடுத்து வைப்பதற்குப் பதில் ஒவ்வொரு வீணான விஷயத்தையும் இரகசியம் என்கிறார். நகைப்பைத் தவிர்க்கவும் தனது தவறை மறைக்கவும் விரும்புகிறார்.

***பிறகு கூறினான்:***

(59:24) اَلْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ

அவன் எல்லாரையும் பாதுகாப்பவன். எல்லாரின் மீதும் மிகைத்திருப்பவன். சீர்கெட்டுப் போன பணிகளைச் சரிசெய்பவன். அவனது சுயம் மிக மிக தன்னிறைவு கொண்டது.

***பிறகு கூறினான்:***

(59:25) هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى

அதாவது அவன் எத்தகைய இறைவன் எனில் அவன் உடலையும் உருவாக்கியவன். ரூஹையும் உருவாக்கியவன். கருப்பையில் வடிவமைப்பவன். குழந்தைகளின் பிறப்பிற்கு முன்பே கருப்பையில் இருக்கும் போதே அதற்கு வடிவத்தை தந்து விடுகிறான். நமது சிந்தனைக்கு எட்டும் எல்லா நல்ல பணிகளும் அவனது பெயர் தான்.

***பிறகு கூறினான்:***

(59:25) يُسَبِّحُ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

வானத்தில் உள்ளோரும் அவனது பெயரை தூய்மையுடன் நினைவில் கொள்கின்றனர். பூமியில் உள்ளோரும் அவ்வாறு தான் செய்கின்றனர். இதனைத் தவிர இந்த வசனத்தில் இன்னொரு சைக்கினையும் உள்ளது. வானத்திலும் கூட உயிர்கள் இருக்கின்றன. அவர்களும் இறைவனது வழிகாட்டலுக்குக் கட்டுப்பட்டு நிற்பவர்களாவர். அதாவது பல உலகங்களிலும் கூட உயிரினங்கள் இருக்கலாம். இன்னும் சொல்வதாயின் இருக்கின்றன.

***பிறகு கூறினான்:***

(2:21) عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ இறைவன் பெரும் சக்தி வாய்ந்தவன். இது வணங்குபவர்களுக்கு தரும் ஆறுதல் ஆகும்.

இறைவன் இயலாதவனாகவும் வல்லமையுள்ளவனாகவும் இருப்பின் அவன் மீது நாம் என்ன எதிர்பார்ப்பு வைக்க முடியும்?

***பிறகு கூறினான்:***

(1:2–4) رَبِّ الْعٰلَمِيْنَ ۙ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۙ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

(2:187) اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ

அதாவது அந்த இறைவனே எல்லா உலகங்களையும் பரிபாலிப்பவனாவான். ரஹ்மான், ரஹீம். நன்மை தீமையின் நாளிற்கு அவனே உரிமையாளன். எவரது கையிலும் அவன் எந்த சுதந்திரமும் தரவில்லை. அவன் அழைப்பவரின் அழைப்பைக் கேட்பவன். பதில் அளிப்பவன். அதாவது துஆக்களை கபூல் செய்பவன்.

***பிறகு கூறினான்:***

(2:256) اَلْحَيُّ الْقَيُّوْمُ அதாவது எப்போதும் இருப்பவன். எல்லா உயிர்களின் உயிர். எல்லா உயிர்களின் ஆதாரம். அவன் எப்போதுமே நிரந்தரமாக இருப்பவனாக இல்லையெனில், நாம் இறக்கும் முன்பே அவன் இறந்து போய் விடக் கூடாதே என்ற பதற்றம் ஏற்பட்டு விடும்.

*பிறகு கூறினான்:*

இறைவன் ஒரே இறைவன் தான். அவன் யாருடைய மகனும் இல்லை. அவனுக்கு எந்த மகனும் இல்லை. அவனுக்கு சமமாக யாருமில்லை. அவனைப் போன்றும் யாருமில்லை.

*பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:*

இஸ்லாமிய மார்க்கத்தின் எல்லா கொள்கைகளின் அசல் நோக்கம் இதுதான். அது இஸ்லாம் என்னும் சொல்லில் அடங்கியுள்ள தத்துவத்தை அவன் வரை கொண்டு சேர்ப்பது ஆகும்.

இந்த நோக்கத்தில் தான் திருக்குர்ஆனின் போதனைகள் இறைவனை அன்பு கொள்ள வைப்பதற்காக முயற்சி செய்கின்றன. சில இடங்களில் அவனது மென்மையைக் காட்டுகின்றன. சில இடங்களில் அவனது உபகாரங்களை நினைவூட்டுகின்றன. ஏனெனில் ஒருவரது அன்பு அவரது அழகின் காரணத்தினால் உள்ளத்தில் அமர்கிறது. அல்லது அவரது உபகாரத்தின் காரணத்தால் உள்ளத்தில் அமர்கிறது. இந்த வகையில் எழுதப்பட்டுள்ளது. இறைவன் தனது எல்லா சிறப்புகளின் அடிப்படையில் வாஹித் லா ஷரீக் ஆவான். எவரும் இணையாக இல்லை. எந்த குறைபாடும் இல்லை. அவன் எல்லா முழுமையான பண்புகளின் தொகுப்பு ஆவான். எல்லா தூய வல்லமைகளையும் வெளிப்படுத்துபவன் ஆவான். அவன் மூலமே எல்லா தூய வல்லமைகளும் வெளிப்படுகின்றன. எல்லா படைப்பினங்களையும் படைத்தான். எல்லா அருள்களின் தலையூற்று ஆவான். எல்லா அருள்களும் அவனிடம் இருந்தே கிடைக்கின்றன. எல்லா நன்மை தீமைகளின் உடைமையாளன் ஆவான். எல்லா பணிகளும் அவனிடமே திரும்புகின்றன. அவன் தூரமாக இருப்பினும் அருகில் உள்ளான். அருகில் இருந்தாலும் தூரமாக இருக்கிறான். அவன் எல்லாருக்கும் மேலே இருக்கிறான். ஆனால் அவனுக்கு கீழ் யாரும் இருக்கிறார் என்று கூற முடியாது. அதாவது அந்த அளவுக்கு அவன் நெருக்கமானவன். அவன் எல்லா பொருட்களை விடவும் மறைவானவன். ஆனால் அவனை விட ஒன்று வெளிப்படையானது என்று கூற முடியாது. அவன் சுயமே உயிருடன் இருப்பவன். ஒவ்வொரு பொருளும் அவனுடன் உயிருடன் உள்ளன. ஹய் என்பதன் பொருள் இதுதான். அவன் உயிருள்ளவனும் உயிருடன் வைப்பவனும் ஆவான். அவன் சுயம் நிலைத்து நிற்பவன். அவனுடன் ஒவ்வொரு பொருளும் நிலைத்து நிற்கின்றன. அவன் ஒவ்வொரு பொருளையும் நிலைநிறுத்தி வைத்துள்ளான். அவனை நிலைநிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிற பொருள் எதுவுமில்லை. அதாவது ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வை சார்ந்துள்ளன. அவன் இல்லாமல் சுயமே உருவான பொருள் ஒன்றுமில்லை. அல்லது அவனின்றி சுயமே ஒரு பொருளும் வாழவும் முடியாது. ஒவ்வொரு பொருளையும் அவன் சூழ்ந்துள்ளான். ஆனால் எப்படிப்பட்ட சூழ்ந்திருத்தல் என்று கூற இயலாது. அவன் வானம், பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளின் ஒளி ஆவான். ஒவ்வொரு ஒளியும் அவனது கையினால் ஒளிபெற்றது. மேலும் அவனை பிரதிபலிக்கக் கூடியவையாகும்.

அவன் எல்லா உலகங்களின் பரிபாலிப்பவன் ஆவான். அவனால் பரிபாலிக்கப்படாத எந்த ரூஹும் இல்லை. சுயமே எதுவும் இல்லை. எந்த ரூஹிடமும் அவனிடமிருந்து கிடைக்கப் பெறாத எந்த சக்தியும் இல்லை. சுயமே பெற்ற எந்த சக்தியும் இல்லை. அவனது ரஹ்மத்துகள் இரு வகைப்படும். எந்த அமலும் எந்த செய்பவரிடமிருந்தும் வெளிப்படுவதற்கு முன்பிருந்தே உள்ள ரஹ்மத் ஆகும். உதாரணமாக, வானம் பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், நீர், நெருப்பு, காற்று, இவ்வுலகின் எல்லா அணுக்கள் இவை அனைத்தும் நமது நிம்மதிக்காக உருவாக்கப்பட்டவையாகும். இந்த பொருள்கள் நமக்கு தேவையாக இருப்பது போன்று அவை நமக்கு படைப்புக்கு முன்னரே ஆயத்தம் செய்து வைக்கப்பட்டவையாகும். நாம் இல்லாத போது இவை அனைத்தும் உருவாக்கப்பட்டன. அதுபோன்று நமது அமலும் இருந்ததில்லை. சூரியன் எனது செயலால் உருவானது என்று எவர் கூற முடியும்? அல்லது பூமி எனது நற்கருமங்களால் உருவானது என்று எவர் கூற முடியும்?

ஆகவே இந்த ரஹ்மத் மனிதனது எல்லா அமல்களுக்கும் முன்னால் வெளிப்பட்டதாகும். எவரது அமலின் விளைவும் அல்ல. இரண்டாவது ரஹ்மத் ஒருவரது செயலுடன் சம்பந்தப்பட்டதாகும். நல்ல செயல் செய்தால் அல்லாஹ் அதற்கு நற்கூலியாக தருகின்றான்.

*பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:*

இறைவன் வரை செல்வதற்கு ஒரேயொரு வழி தான் உள்ளது. இக்காலத்தில் அவ்வழி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களாகும். அந்த சக்தி வாய்ந்த உண்மையான முழுமையான இறைவனுக்கு நமது ரூஹ் மற்றும் நமது ஒவ்வோர் அணுவும் ஸஜ்தா செய்கிறது. அவனது கைகளால் தான் ஒவ்வொரு ரூஹும் படைப்பினங்களின் ஒவ்வோர் அணுவும் தமது ஆற்றலுடன் வெளிப்பட்டன. அவனது இருப்பால் தான் ஒவ்வொரு இருப்பும் நிலைபெற்றுள்ளது. எந்தவொரு

பொருளும் அவனது அறிவுக்கு அப்பாற்பட்டதல்ல அல்லது பரிபாலனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. அவனது படைப்பிற்கு அப்பாற்பட்டதல்ல.

ஆயிரக்கணக்கான தரூதும், ஸலாமும், ரஹ்மத்தும், பரக்கத்தும் அத்தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது இறங்கட்டுமாக! அவர் மூலமே நாம் உயிருள்ள இறைவனை பெற்றோம். அவர்கள் இறைவனுடன் பேசி அவனது இருப்புக்கு அடையாளம் தந்தார்கள். அவர்கள் அசாதாரண அடையாளங்களைக் காட்டி அவனது புராதனமான முழுமையான ஒளிவீசும் முகத்தை நமக்கு காட்டித் தந்தார்கள். எனவே நாம் அத்தகைய ரஸூலை பெற்றோம். அவர்கள் நமக்கு இறைவனை காட்டினார்கள். நாம் அத்தகைய இறைவனைப் பெற்றோம். அவன் தனது முழுமையான ஆற்றலைக் கொண்டு ஒவ்வொரு பொருளையும் படைத்தான். அவனது வல்லமை எத்துணை மகத்துவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவனின்றி எந்தவொரு பொருளும் இருப்பினை பெற்றிருக்க முடியாது. அவனது உதவியின்றி எந்தவொரு பொருளும் நிலைத்து நிற்க முடியாது. அவன் நமது உண்மையான இறைவன். எண்ணற்ற பரக்கத்துகளை உடையவன். மிகுந்த அழகு வாய்ந்தவன். எண்ணற்ற உபகாரம் செய்பவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை.

***பிறகு இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவனது சுயம், மறைவிலும் மறைவான சூழ்நிலை கொண்டது. மிக்க இரகசியமானது. மிகவும் மறைவானது. அவனை மனித பகுத்தறிவு கண்டறிய இயலாது. அவன் மறைந்துள்ளவனாவான். வெறும் அறிவு கொண்டு அவனை அளவிட முடியாது. நாத்திகர், நாங்கள் எவ்வாறு அறிவு கொண்டு அவனைப் புரிவது என்கின்றனர். அல்லது எவ்வாறு அறிவால் மட்டும் புரிவது? என்கின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உங்கள் ஆற்றலால் மட்டும் மனித பகுத்தறிவு அவனை அறிய முடியாது. எந்த அறிவுப்பூர்வ ஆதாரமும் திட்டவட்டமான ஆதாரமாக முடியாது. ஏனெனில் பகுத்தறிவின் ஓட்டம் மற்றும் முயற்சி இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பினங்களைக் கவனித்து ஒரு படைத்தவனின் தேவையை உணர முடியும் என்ற அளவில் நின்று விடுகிறது. பகுத்தறிவு அதிகபட்சம் எந்த அளவுக்கு செல்ல முடியும் எனில், ஒரு பொருளைப் பார்த்து விட்டு ஒருவன் இதை உண்டாக்கியுள்ளான் என்று கூற முடியும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

தேவையை உணர்வது வேறு விஷயம். இந்தத் தகுதி பார்வை ஞானம் வரை சென்றடைந்து தேவையாக உணரப்பட்ட இறைவன் உண்மையில் இருக்கிறான் என்று உறுதி கொள்வது என்பது வேறு விஷயம். எந்த இறைவன் தேவையோ அவன் இருக்கிறானா இல்லையா என்பதை உணர்வது என்பது வேறு விஷயம்.

ஏனெனில் பகுத்தறிவு குறையுடையது; நிறைவில்லாதது. ஐயத்திற்கிடமானது. ஒவ்வொரு தத்துவ ஞானியும் பகுத்தறிவின் மூலம் இறைவனை உணர்ந்து விட முடியாது. இன்னும் சொல்வதாயின், அறிவின் மூலம் இறைவனை அறிவதற்காக விரும்புபவர்கள் கடைசியில் நாத்திகர்களாகி விடுகின்றனர். பூமியில் உருவாக்கப்பட்ட பொருள்களை ஆய்வு செய்வது அவர்களுக்கு எந்தப் பயனையும் தராது. பெரும் சிந்தனையாளர்கள், பிரபஞ்சத்தின் மீது ஆய்வு செய்கின்றனர். பூமியின் மீது ஆய்வு செய்கின்றனர். அறிவியல் மீது ஆய்வு செய்கின்றனர். ஆனால் அவர்களுள் பலர் நாத்திகர்களாக இருக்கின்றனர். இப்போதும் அத்தகையோர் தென்படுகின்றனர். வெறும் பகுத்தறிவை மட்டும்பயன் படுத்தியதால் அவர்களுக்கு எந்தப் பயனும் கிடைப்பதில்லை.

அத்தகையோர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை எள்ளி நகையாடுகின்றனர். விளைவு என்ன? அல்லாஹ்வின் பெயரை கூறுகின்ற இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் மற்றும் இறைவனுடன் சிறப்பான தொடர்புள்ளவர்களை எள்ளி நகையாடுகின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அவர்களுக்கு ஆதாரமாக உலகில் ஆயிரக்கணக்கான பொருள்கள் உள்ளன. அவை இருப்பது கொண்டு நமக்கு எதுவும் பயன் இருப்பதாக நாம் பார்ப்பதில்லை. அவற்றை பார்ப்பதால் நமது எந்த அறிவுச் சான்றும் கிடைப்பதில்லை. அவை ஓர் படைப்பாளனுக்கு சான்றாக இல்லை. அவை வீணான பொருள்களாகவே உள்ளன. பகுத்தறிவு அதுவரை சென்று சேராத போது ஓர் உருவாக்கியவன் இருந்தாக வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை என்று நினைக்கின்றனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

பரிதாபம்! அறிவற்றவர்கள் அறிவதில்லை. ஒரு பொருளைக் குறித்து அறிவு இல்லை எனில், அப்பொருளே இல்லை என்று ஆகி விடாது. ஒரு பொருள் பற்றி நமக்கு தெரியவில்லை எனில் அப்பொருளே இல்லை என்று ஒருபோதும் அர்த்தம் ஆகாது. இத்தகைய மக்கள் இப்போது பல இலட்சக்கணக்கில் காணப்படுகின்றனர். அவர்கள் தம்மை முதல்தரம் வாய்ந்த அறிவுடையோர் என்றும் தத்துவஞானி என்றும் கருதிக் கொள்கின்றனர். இப்போது கோடிக்கணக்கில் உள்ளனர். உலகில் பலர் இதுபோன்ற விஷயத்தால் தான் இறைவன் மீது நிச்சய உறுதி கொள்வதை விட்டு விட்டனர். அவர்களின் ஆன்மீகம் வெறுமையாகிக் கொண்டே செல்கிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவனது இருப்பை கடுமையாக மறுக்கின்றனர். எனவே அவர்களுக்கு வலுவான பகுத்தறிவுச் சான்று இறை இருப்புக்கு ஆதரவாக அவர்களுக்கு கிடைத்திருந்தால் அவர்கள் இறை இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள். இறை இருப்பிற்கு ஓர் உறுதிவாய்ந்த தெளிவான ஆதாரமாக விளங்கக்கூடிய பகுத்தறிவு அவர்களை வழிநடத்தியிருந்தால் கடுமையான நாணமற்ற எள்ளி நகையாடல்களுடன் இறை இருப்பை ஒருபோதும் மறுத்திருக்கமாட்டார்கள். அதாவது அத்தகைய உறுதி வாய்ந்த பகுத்தறிவு சான்று அவர்களுக்கு கிடைத்திருந்தால் அவர்களின் வாயை அடைக்க அது போதுமானதாக இருந்திருக்கும். பிறகு இறை இருப்பை அவர்கள் கிண்டல் செய்திருக்கமாட்டார்கள்; மறுத்திருக்கவும் மாட்டார்கள். இதைத்தான் இக்காலத்தில் உலகில் பெரும்பாலார் செய்து கொண்டிருக்கிறார்கள்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஒருவர் தத்துவவாதிகளின் படகில் அமர்ந்து கொண்டு ஐயங்களின் புயலிலிருந்து ஈடேற்றம் பெற முடியாது. பிறகு தத்துவவாதிகளின் பேச்சுக்களைக் கேட்டல், வெறும் அறிவியலைப் பார்த்தல், ஆன்மீகத்தைப் புறந்தள்ளி விட்டு பார்த்தல் ஆகியவற்றால் இறை இருப்பு பற்றி உள்ளத்தில் ஏற்படும் சந்தேகங்களிலிருந்து விடுதலை பெற முடியாது. மாறாக கண்டிப்பாக அவர் மூழ்கிப் போய் விடுவார். அதாவது மேலும் நாத்திகத்தில் மூழ்கிப் போய் விடுவார். ஒருபோதும் களங்கமற்ற ஏகத்துவம் என்ற பானம் அவருக்கு கிடைக்கவே செய்யாது.

இப்போது சிந்தியுங்கள்! இந்த எண்ணம் எந்த அளவுக்கு பொய்யும், கெட்ட நாற்றமடிக்கின்றதும் ஆக உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வஸீலா இல்லாமல் தவ்ஹீது கிடைக்க முடியாது. ஆன்மீக வஸிலா கிடைக்காதவரை ஒருவருக்கு தவ்ஹீது கிடைக்க முடியாது. ஆன்மீக வஸீலா என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் மூலமே மனிதர் நஜாத் –ஐப் பெற முடியும்.

அறிவற்றவர்களே! இறைவனது இருப்பின் மீது உங்களுக்கு முழுமையான உறுதி இல்லாத போது தவ்ஹீது மீது எப்படி உறுதி ஏற்பட முடியும்? நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள்! உறுதியான தவ்ஹீது நபி மூலமே கிடைக்க முடியும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் நாத்திகவாதிகளையும், தீய மார்க்கவாதிகளையும் ஆயிரக்கணக்கான வானத்து அடையாளங்களைக் காட்டி இறை இருப்பை ஒப்புக் கொள்ளச் செய்தார்கள். இப்போது வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுபவர் அந்த அடையாளங்களை நாத்திகர்கள் முன்பாக எடுத்து வைக்கின்றனர். இதுதான் உண்மையாகும். உயிருள்ள இறைவனுடைய உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீது அவனது உள்ளத்தில் நுழையவும் செய்யாது. அவர் உறுதியாக இறை இருப்பை ஏற்கவும் முடியாது. தூய முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமே கிடைக்கிறது. பிறகு இறை இருப்பின் மீது உறுதி தருவதற்காக மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தனது கவனத்தை இறைவன் மீது வைக்க வேண்டும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் துயரத்துடன் கூறுகிறார்கள்:***

நமது இறைவனிடம் எண்ணற்ற அற்புதங்கள் உள்ளன. ஆனால் உண்மை விசுவாசத்துடன் அவனுக்காக ஆகி விட்டவர்களே அதனைப் பார்க்கின்றனர். அவனது ஆற்றல்களின் மீது உறுதி கொள்ளாதவர் அவனது உண்மையான பற்றுள்ளவர்களாக இருக்காதவர்களிடம் அவன் தனது அற்புதங்களை வெளிப்படுத்துவதில்லை. அத்தகைய மனிதன் எத்தகைய பேறிழந்தவன்! அவனுக்கு இதுவரை ஓர் இறைவன் இருக்கிறான் என்று தெரியவில்லை! அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றல் உள்ளவன். நமது சொர்க்கம் நமது இறைவனே. நமது பேரின்பங்கள் எல்லாம் நமது இறைவனிடமே உள்ளன. ஏனெனில் நாம் அவனை பார்த்தோம். ஒவ்வொரு அழகையும் அவனிடம் கண்டோம். அந்த செல்வம் உயிரைக் கொடுத்தேனும் பெறத்தக்கது. எல்லாவற்றையும் இழந்து பெற வேண்டியது வந்தாலும் அந்த மாணிக்கம் பெறத்தக்கது.

இழப்பிற்குரியோரே! அந்த ஊற்றின் பக்கம் ஓடுங்கள். அது உங்கள் தாகத்தை தணிக்கும். அது வாழ்வின் நீராகும். அது உம்மைக் காப்பாற்றும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு அந்த நற்செய்தியை மக்களின் உள்ளத்தில் போடுவேன்? நான் கடை வீதிகளில் உங்களுக்கு ஓர் இறைவன் இருக்கிறான் என்று நீங்கள் கேட்கும் பொருட்டு எந்த முரசு கொண்டு அடித்து உங்களை அழைப்பேன்? கேட்பதற்காக மக்களின் காது திறக்கும் வண்ணம் எந்த வைத்தியம் செய்வேன்?

நாம் இந்த உயிருள்ள இறைவனின் தூதை, இக்காலத்தின் இமாம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரைப் பின்பற்றி உலகிற்கு கொண்டு சேர்ப்பதற்கு அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக! உயிருள்ள இறைவன் இருக்கிறான். இப்போதும் கேட்கிறான்; அடையாளங்களையும் காட்டுகிறான் என்று உலகையும் உணர வைப்பானாக! அவன் பக்கம் திரும்புங்கள்; அவன் பக்கம் வாருங்கள். நாமும் அந்த இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்துவோமாக! அவனது போதனையின்படி அமல் செய்பவர்களாவோமாக! அவனது பண்புகளைப் பற்றிய சரியான புரிதிறனைப் பெறுவோமாக! அவனது வெகுமதிகளுக்கு வாரிசாவோமாக! நாமும் நமது சந்ததிகளும் எப்போதும் அல்லாஹ்வுக்கு ஷிர்க் வைப்பதிலிருந்து எல்லா வகையிலும் பாதுகாப்பாக இருப்போமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **18.04.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456